


**28.11. 2024**

**தலைப்புச் செய்திகள்**

1. நம் நாட்டின் பாதுகாப்புத்திறன் உலகத்தின் கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ளதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. சர்வதேச அளவில் வணிகம் ஆராய்ச்சி மற்றும் முதலீடுகளை கவரும் நாடாக இந்தியா உருவெடுத்து உள்ளதாக மத்திய வர்த்தகம் தொழிற்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் கூறியுள்ளார்.

3. வேளாண் மின் இணைப்புகளால் தமிழ்நாட்டில் 3 லட்சத்து 38 ஆயிரத்து 380 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றிருப்பதாக மாநில மின்துறை அமைச்சர் திரு.செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

4. வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்றிரவு புயலாக வலுப்பெறக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. மஸ்கட்டில் நடைபெறும் ஆசிய கோப்பை ஆடவர் ஜுனியர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖❖

**குடியரசு தலைவர்**

நம் நாட்டின் பாதுகாப்புத்திறன் உலகத்தின் கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ளதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

உதகை வெலிங்டன் ராணுவ பயிற்சி கல்லூரியில் பயிற்சி அதிகாரிகளிடையே இன்று உரையாற்றிய அவர், இந்திய பாதுகாப்பு படையின் பல்வேறு பிரிவுகளில் வலிமை மிக்க பெண்கள் செயலாற்றுவது குறித்து பெருமிதம் வெளியிட்டார்.

உலகின் மிக கடினமான சியாச்சின் மலை உச்சியிலும் பெண் பாதுகாப்பு படை வீராங்கனைகள் துணிச்சலுடன் பணியாற்றி வருவதாக அவர் எடுத்துரைத்தார்.

நாட்டின் பல்வேறு பிரிவுகளில் மகளிர் செயலாற்றுவது குறித்து அவர் பெருமிதம் வெளியிட்டார்

கடற்படை பிரிவில் பெண்கள் முன்னிலை வகிப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அவர், எழுச்சிமிகு இளம் வீராங்கனைகள் அக்னிவீரர்களாக செயலாற்றுவதாக எடுத்துரைத்தார்.

தேசத்தை முதன்மையான இலக்காக கொண்டு பாதுகாப்பு படையினர் செயலாற்றுவது குறித்து பெருமிதம் வெளியிட்ட அவர், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ராணுவ தளவாடங்களின் தரத்தை சுட்டிக்காட்டினார்

சுயசார்பு உணர்வுடன் இந்தியா செயலாற்றுவது குறித்து பெருமிதம் வெளியிட்ட அவர், நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இந்திய தளவாடங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதாக புகழாரம் சூட்டினார்.

சர்வதேச அமைதிக்கான இந்தியாவின் நிலைப்பாட்டை பாராட்டிய குடியரசு தலைவர், பல்வேறு துறைகளில் படைப்பாற்றல் திறனுடனும், தற்சார்பு எழுச்சியுடனும் செயலாற்றும் இந்தியாவின் நவீன தொழில்நுட்பங்களை பாராட்டினார்.

முன்னதாக வெலிங்டன் ராணுவ பயிற்சி மையத்தின் போர் நினைவுச்சின்னத்தில் குடியரசு தலைவர் மலரஞ்சலி செலுத்தினார்.

பயிற்சி அதிகாரிகளுடனும் அவர் கலந்துரையாடினார்.

பழங்குடியின மக்களை நாளை சந்தித்து கலந்துரையாடும் குடியரசு தலைவர் அவர்களின் கலாச்சார நடன நிகழ்ச்சிகளையும் பார்வையிடுகிறார்.

தொடர்ந்து நாளைமறுநாள் **திருவாரூர் மத்திய பல்கலைக்கழக** பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கவுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர் தொடர்ச்சி

**இதனிடையே குடியரசு தலைவரின் திருவாரூர்** வருகையை முன்னிட்டு பாதுகாப்பு காரணங்களுக்காக நாளையும், நாளைமறுநாளும் திருச்சி மாவட்டத்தில் ட்ரோன் உட்பட ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறக்க தடைவிதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. மா.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

**வணிக நிறுவன குழுவிற்கு எதிரான ஊழல்** குற்றசாட்டுகள் உள்ளிட்ட பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் இன்றும் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும் காங்கிரஸ் திமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள் அவையின் மையப்பகுதியில் குழுமி இப்பிரச்சனையை எழுப்பி முழக்கமிட்டன.

அவையில் அமைதி காக்க அவைத்தலைவர் திரு. ஓம்பிர்லா விடுத்த கோரிக்கையை யாரும் செவிமடுக்காத நிலையில் கேள்வி நேரத்தை அவைத்தலைவர் தொடர்ந்து நடத்த முற்பட்டார்

ஆனால் அமளி தொடரவே அவை முதலில் நண்பகல் வரையிலும் பின்னர் நாள்முழுமைக்கும் அவைத்தலைவர் ஒத்திவைத்தார்.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சனை எதிரொலித்ததால் அவை நாள்முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையே நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகளின் நடத்தை குறித்து கண்டனம் தெரிவித்துள்ள நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள் தேவையற்ற அமளியில் ஈடுபடுவதாகவும், இதனால் புதிய உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை தெரிவிக்க இயலவில்லை என்றும் குறைகூறினார்.

இந்நிலையில் வக்.ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் அறிக்கையை தாக்கல் செய்வதற்கு காலநீட்டிப்பு கோரி இக்குழு தலைவர் ஜெகதாம்பிகா பால் கொண்டுவந்த தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முன்னதாக வயநாடு மற்றும் **Nanded** மக்களவை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் கட்சியின் திருமதி. பிரியங்கா காந்தி மற்றும் திரு. ரவீந்திர சவான் இன்று மக்களவையில் உறுப்பினர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖

**பியூஷ்கோயல்**

**சர்வதேச அளவிலான வணிகம் ஆராய்ச்சி மற்றும்** முதலீடுகளை கவரும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று மத்திய வர்த்தகம் தொழிற்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பல்வேறு துறைகளில் இந்தியாவின் வளர்ச்சியால் இந்நிலை எட்டப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

மின்னனு இந்தியா பிரச்சாரம், நாட்டில் டிஜிட்டல் புரட்சியை ஏற்படுத்தியிருப்பதாக மகிழ்ச்சி தெரிவித்த அமைச்சர், தரவு மையம், செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி, உலகளாவிய திறன் மேம்பாட்டு மையம் போன்றவை இதற்கு சான்றாக திகழ்கிறது என்றார்.

வலைதள இணைப்பு தடம் அறிமுகம் செய்யப்பட்டதன் மூலமும், கட்டமைப்பு மேம்பாடுகளாலும் நம்நாட்டின் இணைப்பு பெரிய அளவிலான மாற்றங்களுடன் வளர்ச்சி கண்டிருப்பதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

அமெரிக்கா மற்றும் பிரிட்டனில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் இந்தியாவின் வர்த்தகத்தை எவ்விதத்திலும் பாதிக்காது என்று கூறிய அவர், தடையில்லா ஒப்பந்த வர்த்தகம் குறித்து பிரிட்டனுடன் குளிர்கால கூட்டத்தொடருக்கு பின்னர் பேச்சுவார்த்தைகள் தொடரும் என்றார்.

5-ஜி அலைகற்றை நாடுமுழுவதும் விரிவுபடுத்தப் படும் என்றும் திரு. பியூஷ்கோயல் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

**தர்மேந்திர பிரதான்**

**காஞ்சிபுரம் ஏனாத்தூரில் அமைந்துள்ள சங்கரா** பல்கலைக்கழக நிகழ்ச்சியில் மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் இன்று பங்கேற்கிறார்.

முன்னதாக அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோவிலில் அமைச்சர் சுவாமி தரிசனம் மேற்கொண்டார்.

2 நாள் பயணமாக தமிழகம் வந்துள்ள அமைச்சர் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

**ஹேமந்த் சோரன்**

**ஜார்கண்ட் மாநில முதலமைச்சராக,** ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவர் திரு. ஹேமந்த் சோரன் இன்றுமாலை பதவியேற்கிறார்.

ராஞ்சியில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஆளுநர் திரு. சந்தோஷ்குமார் கேங்வார் அவருக்கு பதவி பிரமாணமும், ரகசியகாப்பு பிரமாணமும் செய்துவைக்கிறார்.

நடந்து முடிந்த 81 உறுப்பினர் கொண்ட சட்டப்பேரவை தேர்தலில், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா தலைமையிலான INDI கூட்டணி 56 இடங்களில் வெற்றிபெற்றதை அடுத்து 4-வது முறையாக திரு. ஹேமந்த் சோரன் முதலமைச்சராக பதவியேற்க உள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

**அமலாக்க இயக்குனரகம்**

பட்டய கணக்காளர்கள் தொடர்புடைய சைபர் வலைதள குற்றச்சாட்டுகள் குறித்த சோதனைகளை அமலாக்க இயக்குனரகம் இன்று மேற்கொண்டுள்ளது.

**QR Code** மோசடி, பகுதிநேர வேலை தொடர்பான ஊழல் குற்றங்கள் தொடர்பாக இந்த தேடுதல்வேட்டை நடைபெற்று வருகிறது.

டெல்லி **Bijwasan** பகுதியில் அமலாக்க இயக்குநரக அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டிருந்த போது அவர்கள் மீது தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது.

இதனிடையே சர்வதேச ஆள்கடத்தல் சம்பவம் தொடர்பாக தேசிய புலனாய்வு முகமையும், 6 மாநிலங்களிலுள்ள 22 இடங்களில் விரிவான சோதனைகளை இன்று மேற்கொண்டு வருகிறது.

மியான்மர் மற்றும் லாவோஸ் நாடுகளை தலைமையிடமாக கொண்டு நடைபெற்ற சைபர் குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்நடவடிக்கை.

❖❖❖❖❖❖❖❖

**கோவா சர்வதேச திரைப்பட விழா**

**கோவா பனாஜியில் 55-வது சர்வதேச** திரைப்பட விழா இன்றுடன் நிறைவடைகிறது.

இன்றுமாலை நடைபெறும் விழாவில் சிறந்த திரைப்படத்திற்கான தங்கமயில் விருது உட்பட பல்வேறு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

3 இந்திய திரைப்படங்கள் உட்பட 15 திரைப்படங்கள் தங்கமயில் விருதிற்கான போட்டியில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖

**செந்தில் பாலாஜி**

**தமிழகத்தில், வேளாண் மின் இணைப்புகளின் எண்ணிக்கை** கடந்த 3 ஆண்டுகளில் பெருமளவு உயர்ந்துள்ளதாக, மாநில மின்துறை அமைச்சர் திரு.செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்ட அறிக்கையில், ஒரு லட்சத்து 69 ஆயிரத்து 564 புதிய வேளாண் மின் இணைப்புகள் இக்காலக்கட்டத்தில் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதற்காக மின் கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு உள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த இணைப்புகள் வழங்கப்பட்டதன் மூலம், 3 லட்சத்து 38 ஆயிரத்து 380 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றிருப்பதையும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**

தமிழகம் முழுவதும் மழையால் 13 ஆயிரத்து 749 ஹெக்டேர் விளைநிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதாக மாநில வேளாண்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தஞ்சையில் கனமழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை ஆய்வுசெய்தபின் செய்தியாளர்களிடம் பேசியஅவர், இம்மாவட்டத்தில் மழை தொடங்குவதற்கு முன்பே நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதால் பாதிப்பு குறைந்துள்ளதாக கூறினார்.

தூர்வாராத வாய்க்கால்கள், தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

**அன்பில் மகேஷ் - வாய்ஸ்**

இதனிடையே நாகை மாவட்டத்தில், மழையால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாநில பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில்மகேஷ் பொய்யாமொழி இம்மாவட்டத்தில் 5 ஆயிரத்து 400 ஹெக்டேர் பயிர் மழையால் பாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

மழை விட்டபிறகு சேதமான பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

**சேகர்பாபு**

**தமிழ்நாட்டில் மூன்று திருக்கோவில்களில் இன்று** குடமுழுக்கு நடைபெற்றதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னை புரசைவாக்கம் அருள்மிகு கங்காதீஸ்வரர் திருக்கோவில் குடமுழுக்கு நிகழ்ச்சியில் பங்கேற்றபின் செய்தியாளர்களிடம் பேசியஅவர் வெள்ள பாதிப்புகளை எதிர்கொள்ள அரசு தயார் நிலையில் இருப்பதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

**S.S.சிவசங்கர்**

**பெரம்பலூர் மாவட்டம், குன்னம் தொகுதி, வேப்பூர்** ஒன்றியம், ஒதியம் அரசு உயர்நிலை பள்ளியில் மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. **S.S.**சிவசங்கர், “தேர்வை வெல்வோம்” 10-ம் வகுப்பு மாணாக்கருக்கான வழிகாட்டி வினாடி வினா தொகுப்பினை இன்று வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

**வானதி ஸ்ரீநிவாசன்**

**கைவினைஞர்களின் வாழ்வை மேம்பட செய்வதே** பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தின் நோக்கம் என்று பி.ஜே.பி. தேசிய மகளிரணி தலைவர் திருமதி. வானதி ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில் 18 வகையான பாரம்பரிய தொழில்களில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்கள் இத்திட்டத்தால் பயன்பெறுவர் என்பதால் தமிழகத்தில் இத்திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

**வானிலை**

**வங்கக்கடலில் சென்னைக்கு தென்கிழக்கே** 480 கிலோ மீட்டர் தொலைவில் மையம் கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மணிக்கு 2 கிலோ மீட்டர் வேகத்தில் நகர தொடங்கியுள்ளதாக வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இது அடுத்த 12 மணிநேரத்தில் புயலாக வலுப்பெறக்கூடும் என்றும், நாளைமறுநாள் காரைக்கால் மகாபலிபுரம் இடையே கரையை கடக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களில் நாளைமறுநாள் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக கூறப்பட்டுள்ளது.

**நாகை** மாவட்டத்தில் வெள்ள கட்டுப்பாட்டு அறை 24 மணி நேரமும் செயல்படும் என தெரிவிக்கப்பட்டு உள்ளதாக

மழைகாரணமாக பழனி அருகே பாலாறு அணை முழு கொள்ளளவை எட்டியுள்ளதால் கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**மழை – வாய்ஸ்**

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாளை மறுநாள் காரைக்கால் - மகாபலிபுரம் இடையே கரையை கடக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் **திரு.செந்தாமரை கண்ணன்** தெரிவித்துள்ளார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖❖

**திருவள்ளூர் - பழவேற்காடு**

திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடுகடற்கரை பகுதியில், பலத்த சூறைக்காற்று வீசுவதோடு, கடல் கொந்தளிப்புடன் காணப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்..**

❖❖❖❖❖❖❖❖

இருவரி

**தமிழக அரசு பள்ளிகளில் 10-ம் வகுப்பு பயிலும்** மாணாக்கருக்கான திறனாய்வுத்தேர்வு வரும் ஜனவரி 25-ம் தேதி நடைபெறவுள்ளதாக அரசு தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை மாணாக்கர் dge.tn.gov.in எனும் இணையதளத்தில் நாளைமறுநாள் முதல் வரும் 9-ம் தேதிவரை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

தேர்வு செய்யப்படும் மாணாக்கருக்கு உதவித் தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

**சிவகங்கை மாவட்டம் திருபுவனம் வட்டார அளவில்** உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் 78 பயனாளிகளுக்கு ஐம்பதரை லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் இன்று வழங்கினார்.

**திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் இருசக்கர வாகன** ஓட்டிகளிடையே தலைக்கவசம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஆட்சித்தலைவர் திரு தர்ப்பகராஜ் இன்று தொடங்கிவைத்தார்.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறுபான்மையின** மக்கள் நலத்திட்ட உதவிகளை உரிய முறையில் பெற்று பயனடையுமாறு ஆட்சித்தலைவர் திருமதி. அருணா கேட்டுக்கொண்டுள்ளார்.

**நாமக்கல், பெரம்பலூர், திருவாரூர்** உள்ளிட்ட மாவட்டங்களில் விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் நாளை நடைபெறுகிறது.

**தூத்துக்குடி மாவட்டத்தில் மாற்றுத்** திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்நாள் கூட்டம் வரும் 3-ம் நடைபெறும் என ஆட்சித்தலைவர் திரு.இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

**தஞ்சை, கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் நாளை** நடைபெற இருந்த விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் நிர்வாக காரணங்களால் ரத்து செய்யப்படுவதாக ஆட்சித் தலைவர் திரு. பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

ஹாக்கி

**மஸ்கட்டில் நடைபெறும் ஆசிய கோப்பை ஆடவர்** ஜூனியர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**